மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

" ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும்:

1987-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (11-3-1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

27. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1978-ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

28. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ்)

29. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

[1987 மார்ச் 10

30. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரக் கணக்குகள். [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

11. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 1977–78, 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை.

12. 1976–77 முதல் 1979–80 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை.

13. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1969–70 முதல் 1975–76 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை.

14. 1973–74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 MAY 1995
MADRAS-600 009